செயலாற்றுகை அறிக்கை - 2012

அபிவிருத்தி நிதித் திணைக்களம்

உள்ளடக்கம்

		பக்க இலக்கங்கள்
1.	தூர நோக்கு, பணிக்கூற்று மற்றும் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகள்	2-3
2.	2012 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை	
2.1	மேனோக்கு	4
2.2	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான நிதியீட்டம்	4-9
2.3	நுண்நிதி	9-11
2.4	சிறிய அளவிலான துறைகளுக்கான அபிவிருத்தி ஆதரவுகள்	12-13
2.5	உணவுப் பாதுகாப்புக்கான தாங்கிருப்புக்களை பேணல்	13-15
2.6	உர மானியம்	15-19
2.7	அபிவிருத்தி நிதித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் மற்றும் நுண் நிதித்துறைக்கான வெளிநாட்டு நிதியீட்டப்படும் கருத்திட்டங்கள்	19-23
2.8	ஏனையவை	23
3.	நிறுவன மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்	
3.1	அங்கீகாரம் வழங்கப்பட்ட பதவியணி	24
3.2	ஒழுங்கமைப்பு வரைபு	25
3.3	பணியாளர்களின் தகவல்கள்	26-27
3.4	உள்நாட்டு பயிற்சி பாடநெறிகள், கல்விப் பயணங்கள், மற்றும் மாநாடுகள்	28
3.5	வெளிநாட்டு பயிற்சி பாடநெறிகள், கல்விப் பயணங்கள், மற்றும் மாநாடுகள்	29
4.	நிதி தொடர்பான தகவல்கள்	30

துார நோக்கு

" பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் நோக்குடன் சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகள், நுண் தொழில் முயற்சிகள், வங்கியியல், மற்றும் நிதிச் சந்தைகளை அபிவிருத்தி செய்வதற்கான வசதியளிக்கும் பிரதான அரச நிறுவனமொன்றாக மாறுதல். "

பணிக்கூற்று

" சிறிய மற்றும் நடுத்தர துறை தொழில் முயற்சிகள், நுண் தொழில் முயற்சிகள் துறை, வங்கியியல் துறை போன்றவற்றின் அபிவிருத்தி மற்றும், தொடர்புபட்ட நிறுவனங்களின் அவசியமான தலையீட்டினூடாக நிதிச்சந்தையை மேம்படுத்துதல் போன்றவற்றிற்கான நிதி வளங்களைத் திரட்டுவதற்கான பொருத்தமான கொள்கைகளையும் மற்றும் உபாயங்களையும் உருவாக்குதல். "

திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

- நிதித்துறை அபிவிருத்திக்கும், அரசாங்கத்தின் அனுசரணையில் வழங்கப்படும் நிதி உதவித் திட்டங்களுக்கும் பொருத்தமான கொள்கைகளையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் உபாயங்களையும் உருவாக்குதல்.

- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் மற்றும் நுண் நிதித் துறைகளின் அபிவிருத்திக்கான பிரதான பிரச்சினைகளை இனங்காணலும், அவற்றிற்கான தீர்வுகளை வழங்குதலும்.

- வங்கியியல், காப்புறுதி, சிறிய, நடுத்தர மற்றும் நுண் அளவிலான தொழில் முயற்சிகள் போன்றவற்றிற்கான சட்டங்ளை உருவாக்குவதற்கான வசதிகளை அளித்தல்.

- வரவு செலவுத்திட்டப் பிரேரணைகளை உருவாக்குதல், நடைமுறைப்படுத்துதல்,
- மற்றும் பின் நடவடிக்கைகளை எடுத்தல், மற்றும் கொள்கைகளை வசதிப்படுத்துவதற்கான ஆய்வுகளை நடாத்துதல்.

- காலத்துக்குக் காலம் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் தோற்றம் பெறும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அவசியமான கொள்கைகளை வகுப்பதற்கு அவசியமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

2. அபிவிருத்தி நிதி 2012

2.1 மேனோக்கு

கைத்தறி, நெசவு, துணி மற்றும் புடவை, பெருந்தோட்டக் கைத்தொழில்கள், சுற்றுலா, விவசாயம், உணவும் பானமும், நிர்மாணம், வர்த்தகம், தயாரிப்பு, களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து, மற்றும் ஏனைய சேவைகள் போன்ற துறைகளில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளினால் மேற்கொள்ளப்படும் பாரிய அளவிலான செயற்பாட்டினை இனங்கண்டு, அரசாங்கத்தின் "மகிந்த சிந்தனை" கொள்கை வேலைச்சட்டகத்தின் ஊடாக மெய்ப் பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்காக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறைக்கு அரசாங்கம் அதி உயர் முன்னுரிமையை அளித்துள்ளது. உற்பத்தித் துறையில் வேலைவாய்ப்பிற்கு 35 சதவீத பங்களிப்பினையும், ஏற்றுமதிகளுக்கு 20 சதவீத பங்களிப்பினையும், மற்றும் பெறுமதிச் சேர்க்கைக்கு 30 சதவீத பங்களிப்பினையும் செலுத்தும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 30 சதவீத பங்களிப்பினை மாத்திரம் செலுத்துகின்றது. நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் துறையில் இருக்கக் கூடிய வாய்ப்புக்களை கருத்திற் கொண்டு அத்துறையின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கும், போட்டித் தன்மை, நவீன கண்டு பிடிப்பு மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை ஊக்குவித்தல், போன்ற நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தினால் உட்கட்டமைப்பு மற்றும் நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை விருத்தி செய்தல், மற்றும் குறைந்த வருமான வரி வீத முறைமை ஒன்று உட்பட கணிசமான அளவிலான ஊக்குவிப்புக்கள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

அபிவிருத்தி நிதியில் ஏற்பட்ட பிரதான நிகழ்வுகள்

முதன்மைத் துறை அபிவிருத்திக்கான நிதி

- உர மானிய நிகழ்ச்சித் திட்டம்
- உற்பத்தி மேம்பாடும் மற்றும் சேதன உரத்தின் பயன்பாடும்
- விதைகளையும் மற்றும் நாற்றுப் பொருட்களையும் வழங்குதல்
- பயிர் இழப்புக்களின் இடர்களைக் குறைப்பதற்கான "பயிர் காப்புறுதி முறைமையொன்றின் அறிமுகம்
- நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம்

நுண் நிதித் துறை அபிவிருத்தி மீதான ஈடுபாடு

- காப்புறுதி மற்றும் குத்தகை போன்ற நிதிச் செவைகளை வழங்குவதற்கான ஊக்குவிப்பு
- தொழில் முயற்சிப் பயிற்சியும் மற்றும் திறன் அபிவிருத்தியும்
- " திவி நெகும நிகழ்ச்சித் திட்டத்தின்" ஊடாக நுண்நிதிச் சந்தைகளுக்கான நிதி உட்பாய்ச்சல்களின் அதிகரிப்பு
- மேற்பார்வை அல்லது ஒழுங்கு முறைக்கான பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கான நுண்நிதிச் சட்ட மூலத்தினை சமர்ப்பித்தல்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறையின் அபிவிருத்தியில் உபாய ரீதியான ஈடுபாடு

- நிதியீட்டத்துக்கான அடைவுகளை விருத்தி செய்தல்
- சந்தை வாய்ப்புக்களை விருத்தி செய்தல்
- கீழ் ஒப்பந்தம் தொடர்பான ஏற்பாடுகளை விருத்தி செய்தல்
- வரிச் சுற்றாடலை விருத்தி செய்தல்

2.2 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான நிதியீட்டம்

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை விருத்தி செய்வதற்கான நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்வது நெருக்கடியான ஒரு காரணியாக இருப்பதனால், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான நிதியீட்டத்துடன் தொடர்புடைய விடயங்களை

இனங்காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கொள்கை முன்னெடுப்புகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கூறிய விடயங்களைக் கருத்திற் கொண்டு விவசாயம், கைத்தொழில், மற்றும் சேவைகள் துறைகளை விருத்தி செய்வதற்காக அத்துறைகளில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு அரச மற்றும் தனியார் துறை வங்கிகளினால் 2012ஆம் ஆண்டு காலப்பிரிவில் ரூபா 190,979 மில்லியன்கள் வழங்கப்பட்டுள்ளன. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் அபிவிருத்தியில் அரச மற்றும் தனியார் துறையின் உயர் பங்களிப்பினை உறுதிப்படுத்துவதன் மூலம் 2012ஆம் ஆண்டில் அரச வங்கிகளுக்கு நிகராக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் முதலீடு செய்வதற்கு தனியார் துறை வங்கிகளும் அதிக அக்கறை காட்டுகின்றன.

அட்டவணை 1 - 2012இல் வங்கிகளினால் வழங்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் கடன்கள்

வங்கி	விவசாயம்		சேவைகள்		கைத்தொழில்கள்		ஏனையவை	
	கடன்களின் எண்ணிக்கை	தொகை (ரூபா மில்லியன்)	கடன்களின் எண்ணிக்கை	தொகை (ரூபா மில்லியன்)	கடன்களின் எண்ணிக்கை	தொகை (ரூபா மில்லியன்)	கடன்களின் எண்ணிக்கை	தொகை (ரூபா மில்லியன்)
இலங்கை வங்கி	12	15.00	231	2,395.00	356	3,354.00	36	346.00
மக்கள் வங்கி	3,247	6,869.90	1,795	4,135.50	1,607	10,393.70	1,227	3,643.40
பிராந்திய அபிவிருத்தி வங்கி	385	195.00	170	85.00	590	490.00	280	590.00
லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி	42	101.25	39	243.22	241	1,120.60	31	113.54
சனச அபிவிருத்தி வங்கி	22	152.00	9	139.00	42	581.00	61	625.00
தேசிய அபிவிருத்தி வங்கி	370	1,725.80	380	1,132.90	1,098	3,346.70	2,817	5,748.30
டீஎப்சீசீ வங்கி	487	1,445.46	1,017	5,981.06	2,953	13,053.60	-	-
வர்த்தக வங்கி	18,362	8,986.71	9,724	19,224.51	31,186	50,939.89	18,210	16,362.88
சம்பத் வங்கி	163	894.97	215	1,074.30	1,828	7,746.26	191	1,633.39
ஹட்டன் நெஷனல் வங்கி	4,364	9,323.82	4,670	13,500.00	2,553	8,800.00	10,397	31,000.00
தேசிய நம்பிக்கை வங்கி	132	679.23	2,453	3,806.13	537	1,129.88	8,876	10,929.35
வரையறுக்கப்பட்ட கொழும்பு யூனியன் வங்கி	2,526	756.00	1,382	2,326.00	3,286	4,839.00	34,873	3,680.00
மொத்தம்	**30,112**	**31,145.14**	**22,085**	**54,042.62**	**46,277**	**105,794.63**	**76,999**	**74,671.86**

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்



நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் வகிக்கும் பங்களிப்பினைக் கருத்திற் கொண்டு அண்மைக் காலமாக அரசாங்கம் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் வெளிநாட்டு நிதி உதவியினைப் பெற்றுக் கொண்டுள்ளது. 2006ஆம் ஆண்டிலிருந்து 2011ஆம் ஆண்டு வரையிலான காலப்பிரிவில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறைக்கு மேற்கொள்ளப்பட்ட மொத்த வெளிநாட்டு நிதி அர்ப்பணிப்புக்கள் 6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

கிராமிய கடன் திட்டம்

2012ஆம் ஆண்டு காலப்பிரிவில், அரசாங்கம் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு புதிய முழுமையான கிராமிய கடன் பிரேரணைத் திட்டத்தின் கீழ் தொடர்ச்சியாக வட்டி மானியத்தினை வழங்கி வந்ததோடு, பங்கேற்பு நிதி நிறுவனங்கள் தமது சொந்த நிதியைப் பயன்படுத்துவதன் மூலம் வழங்கிய கடன்களுக்கான வட்டி மானியமாக ரூபா 195.8 மில்லியன்களை வழங்கியுள்ளது. 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடன்களுக்கான கேள்வி 2012ஆம் ஆண்டில் 46 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

அட்டவணை 2 - புதிய முழுமையான கிராமிய கடன் பிரேரணைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்தப் பயிர்ச்செய்கைக் கடன்கள், 2011-2012

விபரங்கள்	2011	2012
விடுவிக்கப்பட்ட கடன்கள் (ரூபா மில்லியன்)	6,419.16	9,359.80
பயிரிடப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கர்கள்)	316,326.30	355,752.92
பயனடைந்தோரின் எண்ணிக்கை	98,593	112,413
செலுத்தப்பட்ட மானியம் ((ரூபா மில்லியன்)	205.20	195.80

மூலம்: பிராந்திய அபிவிருத்தி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

பயனாளிகளின் பிராந்திய விநியோகத்தினைப் பொருத்த வரை, உயர்ந்த அளவிலான பயனாளிகளின் எண்ணிக்கை ஏனைய மாகாணங்களை விட வட மகாணத்திலும், அதனைத் தொடர்ந்து வட மேல் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் அறிக்கையிடப்பட்டுள்ளது. பகிரப்பட்ட தொகையைப் பொருத்த வரை, 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடனைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் விரிவடைந்ததனாலும், மற்றும் அப்பிரதேசத்தில் காணப்பட்ட புதிய முதலீடுகளை ஊக்கவிக்கக் கூடிய சமாதானச் சூழ்நிலை போன்ற காரணிகளினாலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்று 2011ஆம் ஆண்டிற்கு ஒப்புரவாக 2012ஆம் ஆண்டிலும் அடையப் பெற்றுள்ளது.

அட்டவணை 3 - புதிய முழுமையான கிராமிய கடன் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட பயிர்ச் செய்கைக் கடன்கள், 2011-2012

மாகாணம்	வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை			விடுவிக்கப்பட்ட தொகை (ரூபா மில்லியன்)		
	2011	2012	வளர்ச்சி சதவீதத்தில்	2011	2012	வளர்ச்சி சதவீதத்தில்
மேல்	14	0	-100.0	0.9	0.0	-100.0
மத்திய	4,898	7,086	44.6	329.2	494.7	50.3
தென்	11,554	11,486	-0.5	586.2	674.1	14.9
வட மத்திய	36,989	30,773	-16.8	1,799.9	1,732.1	-3.8
வட மேல்	1,435	1,165	-18.8	63.9	58.6	-8.3
ஊவா	5,632	8,105	43.9	330.7	483.6	46.2
சப்ரகமுவா	569	503	-11.6	22.2	21.5	-3.1
கிழக்கு	9,758	16,686	70.9	591.1	1,243.2	110.3
வட	27,719	36,609	32.0	2,732.2	4,652.0	70.2
மொத்தம்	**98,568**	**112,413**	**43.7**	**6,456.3**	**9,359.8**	**176.7**

மூலம்: பிராந்திய அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

பயிர் விநியோகத்தினைப் பொருத்த வரை, 2012ஆம் ஆண்டில் அதிக அளவிலான கடன் (ரூபா 5,472.6 மில்லியன்) நெற்பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் 73,488 பயனாளிகளுக்கு இடையில் பகிரப்பட்டிருந்ததோடு, அதனைத் தொடர்ந்து வெளிநாட்டு செலாவணி வெளிப்பாய்ச்சலைக் குறைப்பதறகாக இறக்குமதிப் பதிலீட்டுப் பயிர்களாக ஊக்குவிக்கப்பட்ட சோளத்திற்கும், மற்றும் வெங்காயத்திற்கும் அதிக அளவிலான பகிர்வு மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அட்டவணை 4 - பயிர்கள் வாரியாக வழங்கப்பட்ட கடன்கள் - 2012

பயிர்கள்	கடன்களின் எண்ணிக்கை	விடுவிக்கப்பட்ட தொகை (ரூபா மில்லியன்)	நிலப்பரப்பு (ஏக்கர்கள்)
மிளகாய்	2,494	150.5	4,116.69
சோளம்	8,489	389.3	21,240.47
வெங்காயம்	17,334	2,241.8	31,418.69
நெல்	73,488	5,472.6	281,663.41
உருளைக் கிழங்கு	4,198	558.5	5,165.96
மரக்கறி	5,290	485.4	8,032.52
ஏனையவை	1,120	61.7	4,115.19
மொத்தம்	**112,413**	**9,359.8**	**355,752.93**

மூலம்: பிராந்திய அபிவிருத்தித் திணைக்களம்இ இலங்கை மத்திய வங்கி

இம்மானியப்படுத்தப்பட்ட கடன்கள், அந்நியச் செலாவணியை சேமிப்பதற்காக இறக்குமதிப் பதிலீட்டுப் பயிர்களாக ஊக்குவிக்கப்பட்டுள்ள காசுப் பயிர்களை பயிரிடுவதற்காக அவ்விவசாயிகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் இத்திட்டத்தின் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன். இக்கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் எண்ணிக்கையில் சுமார் 30 சதவீதமும், மொத்தப் பகிர்வில் 35 சதவீதமும் இறக்குமதிப் பதிலீட்டுப் பயிர்களாக ஊக்குவிக்கப்பட்டு வரும் சோளம், வெங்காயம், உருளைக் கிழங்கு, போன்ற காசுப் பயிர்களைப் பயிரிடும் விவசாயிகளே பெற்றுக் கொண்டுள்ளனர் என்பதை 2012ஆம் ஆண்டில் அடையப் பெற்ற முன்னேற்றச் செயலாற்றுகை மேலும் காட்டுகின்றது. இக்காசுப் பயிர்களில் சோளமும், சோயா அவரையும் தன்னிறைவு மட்டத்தினை நெருங்கியுள்ளதோடு, ஏற்றுமதி செல்வதற்கான வாய்ப்பினையும் பெற்றுக் கொண்டுள்ளது.

விவசாய கால்நடை அபிருத்தி

நாட்டின் உள்ளூர் பால் உற்பத்தியை விருத்தி செய்யும் நோக்குடன் சிறிய அளவிலான பாற்பண்ணை விவசாயிகள் தமது மூலதனத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான கடன் வசதிகளை வழங்குவத்காக இக்கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 2011ஆம் ஆண்டு பெப்ரவரி மாத இறுதியில் முடிவடையும் மூன்று வருட காலப்பிரிவிற்குள் ரூபா 5,000 மில்லியன்களை விவசாயிகளுக்கு பகிரும் பிரதான நோக்கத்துடன் இக்கருத்திட்டம் 2008ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும், பின்னர் கருத்திட்டக் காலப்பிரிவானது 2012 ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

அட்டவணை 5 - விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டம் , 2008 - 2012

பயனாளிகள்	கடன்களின் எண்ணிக்கை	சதவீதம்	விடுவிக்கப்பட்ட தொகை (ரூபா மில்லியன்)	சதவீதம்
கடனைப் பெற்றுக் கொண்ட சிறிய அளவிலான விவசாயிகள்	13,282	93.5	1,573.14	65.9
தனியார் துறையின் முதலீட்டாளர்கள்	911	6.5	813.66	34.1
மொத்தம்	**14,193**	**100**	**2,386.80**	**100**

மூலம்: பிராந்திய அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடன்களில் 93 சதவீதத்தினை விட அதிகமான அளவு சிறிய அளவிலான பாற்பண்ணை விவசாயிகளினால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதனால், இக்கடன் திட்டத்தின் கீழ் அதிகமாக நன்மையை அடைந்தோர் சிறிய அளவிலான பாற்பண்ணை விவசாயிகளாவர். இத்திட்டத்தின் கீழ் 11 வர்த்தக வங்கிகள் பங்கேற்பு நிதி நிறுவனங்களாக அவர்களது சொந்த நிதியைப் பயன்படுத்துவதன் மூலம் கடன்களை வழங்கி வருவதோடு, 2012 இறுதி வரை அண்ணளவாக ரூபா 150 மில்லியன் அரசாங்கத்தினால் வட்டி மானியமாக பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கான வங்கி நிலையங்கள்

2012 வரவு செலவுத் திட்டப் பிரேரணையின் மூலம் அரசாங்கத்தினால் ஒவ்வொரு மாவட்டங்களிலும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கான விசேட வங்கி நிலையங்களை உருவாக்குவதற்கான வங்கி முறைமையொன்று ஊக்குவிக்கப்பட்டது. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கான விசேட வங்கி நிலையங்களை ஸ்தாபிப்பது தொடர்பாக சகல வர்த்தக வங்கிகளையும், ஊக்குவிப்பதற்காக இவ்வங்கி நிலையங்களுக்கு விசேட வெகுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பிரேரணையின் பிரகாரம், வர்த்தக வங்கிகளினால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் முயற்சியாளர்களுக்கு அவசியமான ஆதரவினை வழங்குவதற்காக, நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட உபகரணங்களை உள்ளடக்கிய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கான வங்கி நிலையங்களை சகல மாவட்ட மட்டங்களிலும் ஸ்தாபிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு அவசியமான ஆலோசனைகளையும் மற்றும் நிதி வசதிகளையும் வழங்குவதற்காக கடப்பாடுடைய பணியாளர்களின் கீழ் இந்நிலையங்கள் தற்போது வெற்றிகரமாக இயங்கி வருகின்றன.

அட்டவணை 6 - சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான வங்கி நிலையங்களின் செயலாற்றுகை

வங்கி	விவசாயம்		சேவைகள்		கைத்தொழில்கள்		ஏனையவை	
	கடன்களின் எண்ணிக்கை	தொகை (ரூபா மில்லியன்)	கடன்களின் எண்ணிக்கை	தொகை (ரூபா மில்லியன்)	கடன்களின் எண்ணிக்கை	தொகை (ரூபா மில்லியன்)	கடன்களின் எண்ணிக்கை	தொகை (ரூபா மில்லியன்)
இலங்கை வங்கி	27	241.20	231	2,332.35	341	3,263.14	36	263.47
மக்கள் வங்கி	19	50.50	55	389.38	137	603.45	54	163.01
பிராந்திய அபிவிருத்தி வங்கி	6	6.7	17	12.00	8	10.4	0	0
மொத்தம்	**52**	**298.4**	**303**	**2,733.73**	**486**	**3,876.99**	**90**	**462.48**

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

முதலீட்டு நிதிக் கணக்கு

2011ஆம் ஆண்டில் வங்கிகளின் வருமானத்தின் மீது அறவிடப்படும் வருமான வரி மற்றும் பெறுமதிச் சேர்க்கையின் மீது விதிக்கப்படும் சீர்திருத்தங்களின் ஊடாக கிடைக்கக் கூடிய சேமிப்புக்களைப் பயன்படுத்துவதன் மூலம் உருவாக்கப்பட்ட முதலீட்டு நிதிக் கணக்கானது, நாட்டில் தற்போது பற்றாக்குறையாக உள்ள நீண்ட கால நிதி வசதிகளை வழங்குவதன் மூலம் நாட்டின் அபிவிருத்திச் செயன்முறைக்கு அதிக அளவிலான பங்களிப்பினைச் செலுத்தியுள்ளது. இம்முதலீட்டு நிதிக் கணக்கினை ஸ்தாபித்ததன் மூலம் நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு ஒப்பந்தக்காரர்கள் பல்வேறு நிர்மாணக் கருத்திட்டங்களில் முதலிடுவதற்கு ஊக்குவிக்கப்பட்டுள்ளார்கள். அதன் பிரகாரம், , வர்த்தக வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி, டீஎப்சீசீ வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியனவற்றிலிருந்து போட்டி ரீதியான வட்டி வீதங்களுக்கு தமது முதலீட்டு நிதிக் கணக்கின் ஊடாக வழங்கப்பட்ட ரூபா 46 மில்லியன் நிதி உதவியினைப் பயன்படுத்துவதன் மூலம் மொத்தம் 575.62 கி. மீ. கொண்ட 18 வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. அதே போல ஏனைய துறைகளுக்கும் தமது முதலீட்டு நிதிக் கணக்கின் ஊடாக

நிதியினை வழங்குவதற்காக அவர்களது இடைக்கால கருத்திட்டத் தொகுதிகளை படிப்படியாக முதலீட்டு நிதிக் கணக்கின் ஊடாக அபிவிருத்தி செய்துள்ளன.

வரைபு 2 - முதலீட்டு நிதிக் கணக்கின் ஊடாக உள்நாட்டு வங்கிகளிலிருந்து வழங்கப்பட்ட நிதி வசதிகள்



2.3 நுண்நிதி

அடமானப் பிரச்சினை மற்றும் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்வதில் உள்ள இயலாமையின் காரணமாக முறை சார் வங்கி முறைமைகளுக்கும் மற்றும் நிதி நிறுவனங்களுக்கும் நேரடியாக அடைவுகளில்லாத முறை சாரா துறையின் சிறிய தொழில் முயற்சியாளர்கள் உட்பட குறைந்த வருமானத்தைக் கொண்ட கிராமிய மற்றும் நகர சமூகங்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வினைத் திறன் கொண்ட ஒரு சாதனமாக நுண்நிதி இனங்காணப்பட்டுள்ளது. நாட்டின் சிறிய பொருளாதாரங்களின் வளர்ச்சிக்கு நுண்நிதித் துறையின் இயலுமையை நிலைப்படுத்துவதற்கான வசதிகளை வழற்குவதன் முக்கியத்துவத்தினை இனங்கண்ட அரசாங்கம், நுண்தொழில் முயற்சியாளர்களுக்கு மட்டுமல்லாமல் மற்றும் வறிய குடும்பங்களும் தமது வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வதன் ஊடாக அவர்களின் பிரதான பொருளாதார முறைமையினை அடைவதற்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கு பல்வேறு நிதி வசதிகளை வழங்குவதறகு அவசியமான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கான நடைமுறைகளை எடுத்துள்ளது. 2012ஆம் ஆண்டில் நுண்நிதி நிறுவனங்களின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட நுண்நிதி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றச் செயலாற்றுகை பின்வருமாறு:

அட்டவணை 7 - பிரதான நுண்நிதி நிறுவனங்களின் முன்னேற்றச் செயலாற்றுகை

நுண்நிதி நிறுவனங்கள்	மொத்த வைப்புக்கள் (ரூபா. மில்லியன்)	மொத்தக் கடன் படுகை (ரூபா. மில்லியன்)	மொத்தச் சொத்துக்கள் (ரூபா. மில்லியன்)	மொத்த முதலீடு (ரூபா. மில்லியன்)	மொத்தக் கடன் தொகுதி (ரூபா. மில்லிய்)
சமூர்த்தி சமூகங்கள்/வங்கிகள்	42,233	87,046	47,323	42,098	84,251
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்	76,378	29,395	67,585	20,100	43,350
விவசாய அபிவிருத்தித் திணைக்களம்	237	184	1042	359	4,715
பிராந்திய அபிவிருத்தி வங்கி	54,710	6,078	69,134	11,385	105,870
சனச அபிவிருத்தி வங்கி	18,003	10,337	24,834	3,430	17,919
மொத்தம்	**191,561**	**133,040**	**209,918**	**77,372**	**256,105**

மூலம்: அபிவிருத்தி நிதித்திணைக்களம்

பிரதான நுண்நிதி நிறுவனங்களினால் வழங்கப்பட்டு 2012ஆம் ஆண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடனின் பெறுமதி ரூபா 256 பில்லியன்களாகும். அத்தொகையில் ரூபா 106 பில்லியன்கள் பிராந்திய அபிவிருத்தி வங்கிகளினால் அறவிடப்பட வேண்டியதோடு, சமுர்த்தி வங்கிச் சமூகங்களினால் வழங்கப்பட்டு அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடனின் பெறுமதி ரூபா 84 பில்லியன்களாகும்.

வர்த்தக வங்கிகளும் நுண்நிதி நடவடிக்கைகளுக்கு வசதியளிப்பதில் பிரதான பங்கை வகிப்பதோடு, 2012ஆம் ஆண்டில் நுண்நிதித் துறைக்கு இவ்வங்கிகளினால் வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடனின் அளவு அட்டவணை 8இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 8 - 2012இல் பிரதான வங்கிகளினால் நுண்நிதித் துறைக்கு மேற்கொள்ளப்பட்ட கடன் பகிர்வுகள்

வங்கியின் பெயர்	கடன் பகிர்வுகள்				
	ரூபா 2 மில்லியன்களை விடக் குறைவாக	ரூபா 2-5 மில்லியன்	ரூபா 5-10 மில்லியன்	ரூபா 10 மில்லியன்களை விட அதிகமாக	மொத்தம் ரூபா மில்லியன்
இலங்கை வங்கி	41,493	3,381	143	414	45,431
மக்கள் வங்கி	2,791	798	494	450	4,534
பிராந்திய அபிவிருத்தி வங்கி	7,748.00	-	-	-	7,748
தேசிய அபிவிருத்தி வங்கி	29	-	-	-	29
சனச அபிவிருத்தி வங்கி	16,461	-	-	-	16,461
வர்த்தக வங்கி	1,602	-	-	-	1,602
சம்பத் வங்கி	74	3	10	-	87
ஹட்டன் நெஷனல் வங்கி	9,106	2,643	1,889	2,745	16,383
மொத்தம்	79,304	6,825	2,536	3,609	92,275

மூலம்: அபிவிருத்தி நிதித்திணைக்களம்

2012 ஆம் ஆண்டில் வங்கிகளினால் நுண்நிதித் துறைக்கு வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடன்களின் பெறுமதி ரூபா 92 பில்லியன்களாக இருந்ததோடு, அத்தொகையில் ரூபா 45 பில்லியன்கள் இலங்கை வங்கியினால் பல்வேறு நுண்கடன் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தவதற்காக வழங்கப்பட்டிருந்தது. இத்துறையில் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கும் சனச அபிவிருத்தி வங்கியும் நுண்நிதித் துறைக்காக ரூபா 16 பில்லியன் கடனை 2012ஆம் ஆண்டில் வழங்கியுள்ளது. ஏனைய வர்த்தக வங்கிகளுக்கு இடையில் நுண்நிதி நடவடிக்கைகளில் பிரதான பங்களிப்பைச் செலுத்தி வரும் ஹட்டன் நெஷனல் வங்கியும், சகல கடன் வரையறைகளும் உள்ளடங்களாக குறிப்பிடத்தக்க கடன் தொகையை நுண்நிதித் துறைக்கு வழங்கியுள்ளது.

அடமானச் சந்தை

கடனைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான அடமானங்கள் தொடர்பாக பிரச்சினைகள் காணப்படுவதனால் மரபு ரீதியான வங்கிகளினால் இன்னும் குறைந்த வருமானத்தை உடைய மக்களுக்கு போதிய அளவு நிதி வசதிகளை வழங்குவதற்கு முடியாத நிலை காணப்படுவதனால், அடமானம் வைத்தலானது சமூகத்தின் சகல மட்டங்களிலுமுள்ள சமூகங்களுக்கு இடையில் மிகப் பிரபல்யமான கடன் வழங்கும் முறைமையாக உருவாகியுள்ளது. இக்கடன் நிகழ்ச்சித் திட்டங்கள் இலக்காகக் கொள்ளப்பட்ட வாடிக்கையாளர் குழுக்களின் அடிப்படை, அவசரத் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருப்பதனால், அடமானக் கடனானது கிராமியப் பிரதேசங்களில் மிகப் பிரபல்யமான ஒரு கடன் முறைமையாக மாறியுள்ளது. இக்கடன் வசதிகள் அநேகமான வங்கிக் கடன் முறைமைகளிலிருந்து வேறுபட்டிருப்பதோடு, குறுகிய காலப்பிரிவிற்குள் சிறிய கடன் பெறுமதியைக் கொண்ட அதிகமான கடன்களை வழங்கக் கூடியதாக உள்ளது. 2012ஆம் ஆண்டில் அடமானக் கடன் தொடர்பான முன்னேற்றச் செயலாற்றுகைகள் பின்வருமாறு.

அட்டவணை 9 - அடமானக் கடன்கள் 2007 - 2012

வங்கியின் பெயர்	கடன்களின் பெறுமதித் தொகை (ரூபா. மில்லியன்)					
	2007	2008	2009	2010	2011	2012
வர்த்தக வங்கி	-	12.80	539.60	3,757.60	23,928.40	26,043.54
டீஎப்சீசீ வங்கி	27.00	206.80	339.50	962.80	4,361.00	3,403.56
ஹட்டன் நெஷனல் வங்கி	16,780.00	21,130.00	21,920.00	27,970.00	35,720.00	62,850.00
மக்கள் வங்கி	76,143.60	96,313.50	125,120.30	189,797.20	291,325.70	317,135.85
சம்பத் வங்கி	11,962.00	16,444.00	24,817.00	43,306.00	64,009.00	61,107.44
பிராந்திய அபிவிருத்தி வங்கி	46,729.50	53,883.00	58,234.10	66,189.20	75,917.70	33,858.55
இலங்கை வங்கி	24,670.00	37,783.90	55,278.00	93,796.20	188,481.10	640,968.84
தேசிய சேமிப்பு வங்கி	10,758.30	14,607.10	24,572.00	36,217.00	57,822.60	72,806.30
செலான் வங்கி	1,577.00	4990.40	7219.00	17,601.00	30,623.20	36,296.25
மொத்தம்	188,647.40	245,371.50	318,039.50	479,597.70	772,188.70	1,254,470.33
வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை	5,095,518	5,900,434	6,673,524	7,608,067	9,027,369	13,139,894
வட்டி வீதம்	19-24%	18-24%	14-23%	10-14%	10-14%	17-21%
சராசரி கடனின் அளவு (ரூபா.)	37,729	42,301	47,682	63,899	85,538	95,470
வளர்ச்சி வீதம்	-	30%	30%	53%	60%	61%

மூலம்: அபிவிருத்தி நிதித்திணைக்களம்

கடந்த ஆறு வருட காலப்பிரிவிற்குள் அடமானக் கடன் முறைமையானது வருடாந்தம் 47 சராசரி வருடாந்த வளர்ச்சி வேகத்தில் வீதத்தில் அதிகரித்துள்ளது. அடமானக் கடனிற்கான வட்டி வீதம் சந்தை நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுவதோடு, அது 14 - 20 சதவீதத்துக்குள் வேறுபட்டுக் காணப்படுகின்றது. சகல வங்கிகளிலும் அடமானக் கடனின் பெறுமதி பொதுவாக உயர் மட்டத்தில் காணப்படுவதோடு, 2012ஆம் ஆண்டில் இம்முறைமையின் ஊடாக ரூபா 1,254 பில்லியனிலும் அதிகமான கடன் தொகையொன்று 13,139,894 வாடிக்கையாளர்களுக்கு இடையில் பகிரப்பட்டுள்ளது. 2007ஆம் ஆண்டில் ரூபா 37,729 பெறுமதியான அடமானக் கடன் முறைமையின் சராசரிப் பெறுமதி 2012ஆம் ஆண்டில் ரூபா 95,470 வரை இரண்டு மடங்கிலும் பார்க்க அதிகமான தொகையினால் வளர்ச்சியடைந்துள்ளது.

நுண்நிதி நிறுவனங்களுக்கு இடையில் இடம் பெறக்கூடிய செயற்பாடுகளை பொருத்தமான மேற்பார்வை அல்லது ஒழுங்கு முறைப்படுத்துவதற்கு நிறுவன ரீதியான பொறிமுறை ஒன்று அத்தியாவசியமாக உள்ளது. இந்நோக்கத்ததை அடிப்படையாகக் கொண்டு நுண்நிதித் துறையின் ஒழுங்கு முறைப்படுத்துவோனாக இலங்கை மத்திய வங்கி செயற்படக் கூடிய வகையில் நாணயச் சபையின் ஊடாக ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை முறைமை ஒன்றை அறிமுகப்படுத்துதவதற்கு நுண்நிதிச் சட்ட மூலமானது வரையப்பட்டுள்ளது.

2.4 சிறிய அளவிலான துறைகளுக்கான அபிவிருத்தி ஆதரவுகள்

அரசாங்கத்தினால், நெல், சோளம், சோயா அவரை, வெங்காயம், உருளைக் கிழங்கு, மற்றும் பால் போன்ற விவசாயப் பொருட்களுக்கான உற்பத்தியாளர்களுக்கான கவர்ச்சிகரமான நிலையான விலையொன்றை உறுதிப்படுத்துதல் போன்ற விரிவான வரையறைக்குள் பரந்துள்ள வசதிகளின் ஊடாக சிறிய அளவிலான உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதன் ஊடாக விவசாயத்தின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டது.

அட்டவணை 10 - தெரிவு செய்யப்பட்ட சில பயிர்களுக்கான பண்ணையில் விவசாயிகளுக்குக் கிடைக்கக் கூடிய விலை 2008-2012

பயிர்	பண்ணையில் உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்கக் கூடிய விலை (ஒரு கிலோ கிராமுக்கான விலை)						
	2006	2007	2008	2009	2010	2011	2012
நெல்	13-14	15-18	20-22	28-30	28-30	28-30	32-35
மிளகாய் (உலர வைத்த)	130	162	163-194	173-193	161-187	214-228	162-201
சோளம்	17-20	20-25	27-36	28-36	29-38	34-46	35-43
வெங்காயம்	33-46	40-50	33-62	30-89	43-151	55-175	46-101
உருளைக் கிழங்கு	52-57	55-58	52-67	55-85	50-81	64-88	64-103
பால் (750 மில்லியன்)	22.72	23.97	30.83	31.20	34.80	50.00	50.00

மூலம்: அபிவிருத்தி நிதித்திணைக்களம்

நெல் சந்தைப்படுத்தும் சபை மற்றும் மாவட்ட செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் ஊடாக அரசாங்கம் நெல்லைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் ஈபடுவதன் ஊடாக நெல்லின் விலையில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்களை சமாளிப்பதற்கும் மற்றும் 2012 ஆம் ஆண்டில் நெல் விவசாயிகளுக்கான நிலையான விலையொன்றை பெற்றுக் கொடுப்பதிலும் அரசாங்கம் வெற்றி கண்டது. வரைபு 3இல் காட்டப்பட்டுள்ளது போல அரசாங்கத்தினால் நெல், மற்றும் அரிசிக்கு விதிக்கப்பட்ட உத்தரவாத விலை முறையின் பெறுபேறாக 2008 ஆம் ஆண்டின் சிறு போகத்திலிருந்து விவசாயிகள் தமது நெல்லுற்பத்திக்கு உறுதியான விலையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கும், நுகர்வோர் அரிசிக்கு உறுதியான சில்லறை விலையொன்றையும் பெற்றுக் கொள்வதற்கும் வழி வகுத்துள்ளது.



நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் திருப்பு முனை என்னவென்றால், நெல் விவசாயிகளுக்கு சாதகமான விளைவொன்றை ஏற்படுத்துவதன் மூலம் நெல்லுக்கான உத்தரவாத விலையொன்றை உருவாக்குவதாகும். கடந்த ஏழு வருட காலப்பிரிவில் உத்தரவாத விலையில் ஏற்பட்ட அதிகரிப்பை அட்டவணை 12.11 எடுத்துக் காட்டுகின்றது. கடந்த ஏழு வருட காலப்பிரிவில் நெல்லின் சராசரி உற்பத்திச் செலவு ஒரு கிலோ

கிராமுக்கு ரூபா 16.50 ஆக இருந்துள்ளதோடு, அக்காலப்பிரிவிற்குள் நெல்லின் உத்தரவாத விலையானது இரண்டு மடங்கை விட அதிகரித்துள்ளது. நெல்லுக்கான நிலையான சந்தையொன்றை உறுதிப்படுத்தும் நோக்குடன் அரசாங்கம், 2013ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டப் பிரேரணையில் ஒரு கிலோ கிராம் நாடு அரிசிக்கான உத்தரவாத விலையை ரூபா 32 ஆகவும், 2012/13 பெரும் போகத்தின் ஒரு கிலோ கிராம் சம்பா அரிசி ரூபா 35 ஆகவும், அதிகரிக்கப்பட்ட அதே வேளை, சேதன உரத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு கிலோ கிலாம் நெல்லுக்கான உத்தரவாத விலை ரூபா 40 ஆகவும் அறிமுகப்படுத்தப்பட்டது.

அட்டவணை 11 - நெல்லுக்கான உத்தரவாத விலை 2006 - 2013

காலம்	உத்தரவாத விலை (ரூபா/கிகி)
2005/06 பெரும் போகம்	15.50 – 16.50
2006 சிறு போகம்	15.50 – 16.50
2006/07 பெரும் போகம்	16.50 – 17.50
2007 சிறு போகம்	16.50 – 17.50
2007/08 பெரும் போகம்	20.00 – 22.00
2008 சிறு போகத்திலிருந்து 2012 சிறு போகம் வரை	28.00 – 30.00
2012/13 பெரும் போகம்	32.00 – 35.00

மூலம்: நெல் சந்தைப்படுத்தும் சபை

நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு மேலதிகமாக திரிபோசா நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் சோயா அவரை மற்றும் சோளம் ஆகியனவற்றை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்தினால் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. திரிபோசா நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட ஒரு கிலோ கிராம் சோளம் ரூபா 45 வீதம் நிரம்பல் செய்வோரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அதே வேளை, விவசாயிகளுக்கு ஒரு கிலோ கிராம் ரூபா 32 வீதம் கொடுக்கப்பட்டது. திரிபோசா நிகழ்ச்சித் திட்டத்திற்கான சோயா அவரையின் மொத்தத் தேவைப்பாடு, உள்ளூர் நிரம்பல் செய்வோரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. அதன் படி, நிரம்பல் செய்வோரினால் ஒரு கிலோ கிராம் ரூபா 85 வீதம் சோயா அவரை விவசாயிகளுக்கு செலுத்தப்பட்டதோடு, திரிபோசா நிறுவனத்தினால் ஒரு கிலோ கிராம் சோயா அவரை ரூபா 95 வீதம் நிரம்பல் செய்வோரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. நிரம்பல் பற்றாக்குறையாக இருந்ததன் காரணமாக ஒரு கிலோ கிராம் ரூபா 105 படி விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது.

மில்கோ நிறுவனத்தின் ஊடாக அரசாங்கம் திரவப் பால் சந்தையில் வெற்றிகரமாக தலையிட்டு பாற்பண்ணை விவசாயிகளுக்கு பசும் பால் ஒரு லீட்டர் ரூபா 50 ஆக உறுதியான விலையொன்று வழங்கப்பட்டது. உள்ளூர் பாற்கைத்தொழிலை தன்னிறைவடையச் செய்யும் மட்டமொன்றுக்குக் கொண்டு வருவதற்காக ரூபா 160 மில்லியன் திரவப் பாலைக் கொள்வனவு செய்வதற்கு 2012 இல் மில்கோ நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. உயர் விளைச்சலைத் தரக்கூடிய விதைகளை வழங்கல், சிறந்த நீர் முகாமைத்துவத்தின் மூலம் நீர் வீண் விரயம் செய்யப்படுவதனை குறைத்தல், சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட செயற்பாடுகளின் காரணமாக இவ்வபிவிருத்தி மானியங்களின் பண ரீதியான தாக்கம் மேலும் வளர்ச்சியடைந்துள்ளது.

2.5 உணவுப் பாதுகாப்புக்கான பாதுகாப்பான தாங்கிருப்புக்களை பேணல்

உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பாதுகாப்பான தொகையொன்றை பேணி வருவதற்கான பொறுப்பு நெல் சந்தைப்படுத்தும் சபையிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்நோக்கத்தினைப் பூர்த்தி செய்வதற்காக நெல் சந்தைப்படுத்தும் சபையானது கிட்டத்தட்ட 2012ஆம் ஆண்டில் ரூபா 3,553.35 மில்லியன்களை செலவு செய்வதன் மூலம் 126,262 மெட்ரிக் தொன் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டதோடு, அது ஆறு வாரங்களுக்குப் போதுமானதாகவும் இருந்தது. நாட்டின் மொத்த நுகர்வுத் தேவையில் 3 வாரங்களுக்கும் பொதியதாக இருந்தது.

அட்டவணை 12 - நெல் சந்தைப்படுத்தும் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்புக்களின் சுருக்கம்

பருவ காலம்	நெல் இருப்பு			பெறுமதி (ரூபா மில்லியன்)
	நாடு (மெதொ)	சம்பா (மெதொ)	மொத்தம் (மெதொ)	
2010 சிறு போகம்	83,819	27,910	111,729	3,184.2
2010/11 பெரும் போகம்	2,913	556	3,469	98.2
2011 சிறு போகம்	58,967	16,205	75,172	2,137.2
2011/12 பெரும் போகம்	107,319	8,467	115,786	3,258.9
2012 சிறு போகம்	9,936	540	10,476	294.4

மூலம்: நெல் சந்தைப்படுத்தல் சபை

மேலும், 2012இல் மாவட்டச் செயலாளர்கள்/அரசாங்க அதிபர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக ரூபா 1,096.61 மில்லியன் செலவில் 37,497.28 மெட்ரிக் தொன் நெல் இருப்பொன்று 2012ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டது. நெல் சந்தைப்படுத்தும் சபையும் அரசாங்க அதிபர்களும் அவர்களது நெல் இருப்புக்களில் 92 சதவீதத்தினை விட அதிகமான அளவை 2011/12 பெரும் போகத்தில் கொள்வனவு செய்துள்ளன.

அட்டவணை 13 - நெற் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்திற்கான நிதியீட்டம் (ரூபா மில்லியன்)

வங்கி	நெல் சந்தைப்படுத்தும் சபை		மாவட்ட செயலகங்களுக்கான வரையறை
	உறுதியளிக்கப்பட்ட கடன்களின் /முற்பணங்களின் உள்ளடக்க வரையறை	31.12.2012 வரை வழங்கப்பட்ட கடன்களும் /முற்பணங்களும்	
இலங்கை வங்கி	3,100	3,100.0	-
மக்கள் வங்கி	2,100	1,668.9	-
பிராந்திய அபிவிருத்தி வங்கி	450	250.0	-
தேசிய சேமிப்பு வங்கி*	1,000	725.9	-
திறைசேரி முற்பணங்கள்	2,000	2,000.0	1,340
ஏனையவை	-	1,155.0	-
மொத்தம்	**8,650**	**8,899.0**	**1,340**

மூலம்: கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு, அரச வங்கிகள்
**சாதாரண கடன் வசதி*

அரிசியில் தன்னிறைவு மட்டத்தை அடையும் அதே வேளை, உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக போதிய அளவில் அரிசி இருப்பை பேணுவதற்கு அவசியமான இயலளவை அதிகரிப்பதன் மூலம் அரசு இறக்குமதி பதிலீட்டு இலக்குக்கு அப்பால் அரிசி உற்பத்தியை அதிகரிப்பதற்கான முயற்சியை மேற்கொண்டது. அதன் பிரகாரம், நெல் சந்தைப்படுத்தும் சபை 22,950 மெட்ரிக் தொன் அரிசியை ஏற்றுமதி செய்ததோடு, உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் ஆதரவுடன் 6,987 மெட்ரிக் தொன் அரிசியை சோமாலியாவுக்கு நன்கொடையாக வழங்கியது.

சோமாலியாவுக்கு வழங்கப்பட்ட நன்கொடைகள் - 2012

நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக தனியார் துறையினால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும். வருடாந்த நெல் உற்பத்தியில் 65 சதவீதம் அளவில் தனியார் துறையினால் கொள்வனவு செய்யப்படுவதோடு, அதற்காக அரச மற்றும் தனியார் வங்கிகளினால் 2012ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உறுதி மொழி அளிக்கப்பட்ட கடனின் அளவு ரூபா 10,015 மில்லியன்களாகும். மொத்த உறுதி மொழி அளிக்கப்பட்ட கடன்களில் அதிக அளவிலான அதாவது 73..5 சதவீதமானவை அரச வங்கிகளினால் தனியார் துறையில் நெல் கொள்வனவு செய்வோருக்கு வழங்கியுள்ளதோடு, அவர்களில் கணிசமான அளவினர் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல் கொள்வனவு செய்வோராவார்.

அட்டவணை 14 - நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக தனியார் துறைக்கு வழங்கப்பட்ட உறுதி மொழி அளிக்கப்பட்ட கடன்கள் - 2012

வங்கி	2011/12பெரும் போகம்		2012 சிறு போகம்		2012 மொத்தம்	
	எண்ணிக்கை.	பெறுமதி (ரூபா. மில்லியன்)	எண்ணிக்கை.	பெறுமதி (ரூபா. மில்லியன்)	எண்ணிக்கை.	பெறுமதி (ரூபா. மில்லியன்)
மக்கள்வங்கி	120	1,010.6	90	512.3	210	1,522.9
இலங்கை வங்கி	69	3,386.0	33	2,3 06.0	102	5,692.0
பிராந்திய அபிவிருத்தி வங்கி	41	61.1	42	88.3	83	149.4
லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி	-	-	-	-	-	-
அரச வங்கிகளின் மொத்தம்	230	4,457.7	165	2,906.6	395	7,364.3
தேசிய அபிவிருத்தி வங்கி	-	-	-	-	-	-
வா்த்தக வங்கி	64	404.9	11	43.5	75	448.4
ஹட்டன் நெஷனல் வங்கி	87	690.5	92	849.7	179	1,540.2
செலான் வங்கி	33	150.0	31	198.1	64	340.1
சம்பத் வங்கி	75	323.0	-	-	75	323.0
தனியார் வங்கிகளின் மொத்தம்	259	1,568.4	134	1,083.2	393	2,651.7
மொத்தம்	**489**	**6,026.1**	**299**	**3,989.8**	**788**	**10,015.0**

மூலம்: குறிப்பிட்ட வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தினால் ஒன்று சேர்க்கப்பட்டது.

2.6 உர மானியம்

நெல்லுக்கான உர மானியம்

நெற் பயிர்ச் செய்கையின் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காக மானியம் வழங்கப்பட வேண்டிய அவசியம் இனங்காணப்பட்டதோடு, அதனை பொருத்தமான முறையில் குறிப்பிட்ட அளவுக்கு பயன்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக கவனம் செலுத்தப்பட்டு வந்துள்ளது. இரசாயன உரத்தின் பாவனை அதிகரித்தமையானது, நெற் பயிர்ச்செய்கையைப் பாதிக்கக் கூடிய பிரதான தடைகளுள் ஒன்றாக இருந்தமையினால் 2005 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் நெல்லுக்கான உர மானிய நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, இந்நிகழ்ச்சித் திட்டமானது தொடர்ந்து ஏழாவது ஆண்டாக 2012ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம், நெல் பயிர்ச்செய்கைக்கு வழங்கப்படும் யூரியா, டீஎஸ்பீ மற்றும் எம்ஓபீ எனப்படும் பிரதான மூன்று வகையான உரங்கள் விவசாய சேவை நிலையங்களின் ஊடாக நாடு பூராவும் 50 கிலோ கிராம் ரூபா 350 படி மானியப்படுத்தப்பட்ட விலையில் விற்கப்பட்டன.

நெற் பயிர்ச்செய்கைக்கு வழங்கப்படும் 50 கிலோ கிராம் நெல் உரப் பொதியொன்றுக்கு அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட மானியம், சந்தை விலையில் 86.5 சதவீதத்திலிருந்து 91.5 சதவீதம் வரையிலான வரையறைக்கு உட்பட்டிருந்ததோடு, 50 கிலோ கிராம் நெல் உரப் பொதியொன்றுக்கு அரசாங்கத்தினால் ஏற்கப்பட்ட மானியமும் அண்மைக் காலமாக அதிகரித்து வந்துள்ளது.



வரைபு 4 - கிலோ கிராம் நெல் உரப் பொதியொன்றுக்கு அரசாங்கத்தினால் ஏற்கப்பட்ட மானியத் தொகையின் ஒப்பீடு 2010 - 2012

நெற்பயிர்ச் செய்கையின் உற்பத்தித் திறனானது நெல்லின் உர மானியத்தின் மீது வளர்ச்சியுற்றுள்ள முறைமையினை அட்டவணை. 15 இன் மூலம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஆயினும், பாதகமானதும் மற்றும் சாதகமானதுமான காலநிலையானது, நெல் உற்பத்தியின் மீது நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துவதோடு, அண்மைக் காலமாக நெற்பயிர்ச் செய்கைக்கு உர மானியம், விதைகள், மற்றும் கடன் வசதிகள் போன்றனவற்றினை வழங்குவதன் மூலமும் எதிர்பார்க்கப்பட்ட பங்களிப்பிலும் அடிக்கடி மறைமுகமான தாக்கமொன்று ஏற்படுத்தப்படுகின்றது.

அட்டவணை 15 - நெற்பயிர்ச் செய்கை தொடர்பான புள்ளி விபரங்களின் மாற்றம் பெரும் போகம்

விபரம்	1999/00 (உர மானியம் இன்றி)	2005/06 (உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் ஆரம்பக் கட்டம்)	2011/12 (உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்த ி ஆறு ஆண்டுகளின் பின்னர்)	அதிகரித்த சதவீதம்	
				1999/00 இலிருந்து 2011/12	2005/06 இலிருந்து 2011/12
நெல் உற்பத்தி (மெ தொ)	1,781,000	2,135,592	2,716,961	34.45	21.40
விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பு (ஹெக்டேயர்)	549,000	591,295	702,075	21.80	15.78
அறுவடை செய்யப்பட்ட மொத்தப் பரப்பு (ஹெக்டேயர்)	526,000	585,903	684,636	23.17	14.42
சுராசரி விளைச்சல் (கிலோ கிராம்/ ஹெக்டேயர்)	3,798	4,069	4,444	14.54	8.44

மூலம்: குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

உர மானியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமையினாலும் மற்றும் 14 தொடர்ச்சியான பயிர்ச் செய்கைப் பருவங்களாக நெல் விவசாயிகளுக்கான உரத்தின் விலைகள் ரூபா 350/- மட்டத்தில் பேணப்பட்டமையினாலும், நெல் உற்பத்திக்குப் பங்களிப்புச் செலுத்திய மொத்த விவசாயிகளின் எண்ணிக்கையும் மற்றும் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்பட்ட நிலத்தின் அளவும் அதிகரித்தள்ளது.

அட்டவணை 16 - நெல் உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான வருடாந்த உர விநியோகம் – 2006 - 2012

வருடம்	இரு பருவங்களிலும் திட்டத்திற்குத் தகுதி பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை	விநியோகிக்கப்பட்ட உரத்தின் அளவு (மெ தொ)			உர மானியத்திற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவு (ரூபா மில்லியன்)
		யூரியா	டீஎஸ்பீ	எம்ஓபீ	
2006	1,099,983	120,509	27,347	30,753	3,970
2007	1,366,234	200,224	64,380	60,481	9,263
2008	1,693,323	257,043	88,073	76,400	22,561
2009	1,741,362	234,343	80,736	71,566	44,280
2010	1,886,509	275,273	92,262	82,533	21,242
2011	1,877,869	285,973	95,039	84,688	22,901
2012	1,701,827	253,068	85,083	77,252	26,268

மூலம்: கமநல அபிவிருத்தித் திணைக்களமும், மற்றும் தேசிய உரச் செயலகமும்

ஏனைய பயிர்களுக்கான உர மானியம்

ஏனைய பயிர்ச்செய்கைகளில் 75 - 90 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறிய அளவிலான விவசாயிகளின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கும், மற்றும் விவசாயிகளின் பயிரிடுவதில் உள்ள இயலளவை ஒரு பயிரிலிருந்து பல பயிர்களை பயிரிடுவதற்கான இயலளவை விருத்தி செய்வதற்கும், விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அரசாங்கத்தினால் 2011ஆம் ஆண்டு மே மாதம் 06ஆம் திகதியிலிருந்து ஏனைய பயிர்களுக்கான உர மானியம் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் உரப் பாவனையாளர்களுக்கான பல்வேறு வகையான நேரடியானதும், மற்றும் கலப்பு உரங்களை பல்வேறு அளவுகளில் தனியார் துறையினதும் மற்றும் அரசாங்கத்தினதும் உரக் கம்பனிகளுக்குச் சொந்தமான விற்பனை நிலையங்களின் ஊடாக பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகள் விரிவாக்கப்பட்டன.

அதன் பிரகாரம் உரப் பாவனையாளர்களுக்கு பின்வரும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

- எந்த ஒரு வகையான கலப்பற்ற உரத்தின் 50 கிலோ கிராம் பொதி ஒன்றின் சந்தை விலை ரூபா 1,200 ஐ விட அதிகமாக இருந்தாலும், ரூபா 1,200 இற்கு விற்பனை செய்யப்படல் வேண்டும்.
- எந்த ஒரு வகையான கலப்பற்ற உரத்தின் 50 கிலோ கிராம் பொதி ஒன்றின் சந்தை விலை ரூபா 1,200 ஐ விட குறைவாக இருந்தால், அதே விலைக்கே விற்பனை செய்யப்படல் வேண்டும்.
- 50 கிலோ கிராம் கலப்பு உரப் பொதி ஒன்று ரூபா 1,300 இற்கு விற்பனை செய்யப்படல் வேண்டும்.

பல்வேறு மட்டங்களிலான அரச நிறுவனங்களின் மூலம் எடுக்கப்பட வேண்டிய அங்கீகாரங்கள், மற்றும் தேவையற்ற ஆவணங்களினால் ஏற்படக் கூடிய நெருக்கடிகளை நீக்குவதன் மூலம் ஏனைய பயிர்களுக்கான உர மானிய நிகழ்ச்சித் திட்டம் விவசாயிகள் பெருந்தோட்டத் தொழிலாளர்கள், மற்றும் சாதாரண வீட்டுத் தோட்ட உரிமையாளர்கள் , போன்றோர் திறந்த சந்தைகளிலிருந்து இலகுவாக அவர்களது தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்கப்பட்டது. மேலும், இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் விவசாயிகள் பல பயிர்களுக்கான அவர்களது செலவை மேலும் குறைத்துக் கொள்வதற்கும் வழிவகுக்கப்பட்டது.

இதன் மூலம் கலப்பற்ற உரத்தின் 50 கிலோ கிராம் பொதியொன்றுககு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள மானியம் சந்தை விலையில் 43.1 சதவீதத்திலிருந்து 80.8 சதவீதம் வயிலான வீச்சிற்குள் காணப்படுகின்றது. தற்போது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் “ திவிநெகும” மற்றும் 1,000,000 வீட்டுத் தோட்டங்கள் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் இதன் மூலம் வழங்கப்படும் பங்களிப்பு இந்நிகழ்ச்சித்

திட்டத்தின் மற்றுமொரு பிரதான நன்மையாக இருப்பதோடு, இந்நிகழ்ச்சித் திட்டம் உள்நாட்டு பொருளாதாரத்தினை வளர்ச்சியுறச் செய்வதோடு, தற்போதைய வாழ்வாதாரத்தினை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.



வரைபு 5 - ஏளைய சகல பயிர்களுக்கான உர மானியம் (50 கிலோ கிராம் பொதியொன்றுக்கு) 2012

கடந்த ஐந்து வருட காலப்பிரிவில் ஏனைய பயிர்களுக்கான மொத்த இரசாயன உரத்தின் பாவனையானது, 2008ஆம் ஆண்டுடன் ஒப்பிகையில் 170,020 மெட்ரிக் தொன்களிலிருந்து 2012ஆம் ஆண்டில் 380,829 மெட்ரிக் தொன்களாக 124 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

2012ஆம் ஆண்டில் அரசாங்கம் உர மானிய நிகழ்ச்சித் திட்டத்திற்காக சுமார் ரூபா 36,456 மில்லியன்களை செலவளித்துள்ளதோடு, அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5 சதவீதமாகவும் இருந்தது. உரப் பாவனையாளரினால் ஏற்கப்படும் செலவை எடுத்து நோக்கினால் நாட்டின் உரத்திற்காக மேற்கொள்ளப்படும் மொத்தச் செலவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 1 சதவீதமாகும்.

அட்டவணை 17 - பொதுவான உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஏனைய பயிர்களுக்கான உரப் பயன்பாடு, 2008 - 2012

பயிர்	2008	2009	2010	2011	2012	சதவீத அதிகரிப்பு 2008 - 2012 வரை
தேயிலை	113,418	171,659	193,474	169,534	195,593	72
இறப்பர்	7,552	7,150	10,825	14,291	15,559	106
தென்னை	16,872	17,625	26,502	54,194	45,710	171
மரக்கறி	18,553	23,353	31,566	51,719	66,494	258
ஏனைய பயிர்கள்	13,625	12,881	19,312	45,585	57,473	322
மொத்தம்	**170,020**	**232,668**	**281,679**	**335,323**	**380,829**	**124**

மூலம்:: அபிவிருத்தி நிதித் திணைக்களம்



உர மானிய நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான விசேட செயற்பாடுகள்

- தொடர்ச்சியான நிரம்பல் ஒன்றை உறுதிப்படுத்துவதற்கு போதிய மட்டமொன்றுக்கு பாதுகாப்பான உரத்தின் அளவை பேணி வருதல்
- இரசாயன உரத்தின் கூடுதலான பாவனையைத் தடுப்பதற்கு இரசாயன மற்றும் சேதன உரத்தின் பொருத்தமான கலப்பு ஒன்றின் பாவனையை ஊக்குவிப்பது தொடர்பாக விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்தல்.
- நெல் உர மானியத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமையை உடைய நெல் விவசாயிகளுக்கான "பயிர் காப்புறுதித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தல்.
- அங்கீகரிக்கப்பட்ட தரச் சான்றிதழ் உள்ளடங்களாக உற்பத்தி செய்து இலங்கை உரக் கம்பனியின் ஊடாக 50 கிலோ கிராம் சேதன உரப் பொதியொன்றை ரூபா 400 உத்தரவாதமளிக்கப்பட்ட விலைக்கு வழங்குவதற்கு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான சேதன உர உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல்.

2.7 அபிவிருத்தி நிதித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் மற்றும் நுண்நிதித் துறைக்கான வெளிநாட்டு நிதியீட்டப்படும் கருத்திட்டங்கள்

2.7.1 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் பிராந்திய அபிவிருத்திக் கருத்திட்டம்

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் பிராந்திய அபிவிருத்திக் கருத்திட்டம் பிரதேச மட்டத்திலான வெளியீட்டினையும் மற்றும் வேலை வாய்ப்புக்களையும் அதிகரிப்பதன் ஊடாக பிரதேச மட்டத்திலான ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கும் நோக்கத்துடன் 2008ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இக்கருத்திட்டம் 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெற்றிகரமான முறையில் பூர்த்தி செய்யப்பட்டதோடு, மொத்த ஒதுக்கீட்டில் அதன் பயன்பாட்டு வீதம் சுமார் 81 சதவீதமாகவும் இருந்தது.

அட்டவணை 18 - கருத்திட்டத்தின் மொத்த முன்னேற்றச் செயலாற்றுகை

நிறுவனம்	ஒதுக்கீடு ஐ அ டொ மில்லியன்	பகிர்வுகள் ஐ அ டொ மில்லியன்	பயன்பாட்டு வீதம்
ஆசிய அபிவிருத்தி வங்கி	50	40.37	80.74%
பங்கேற்பு வர்த்தக வங்கிகள்	16.67	13.7	82.18%
சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள்	22.00	18.02	81.91%
மொத்தம்	**88.76**	**72.09**	**81.22%**

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

கருத்திட்டத்தின் பிரதான அடைவுகள்

- சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு ரூபா 4,261.88 மில்லியன் பெறுமதியான 966 கடன்கள் வழங்கப்பட்டன.
- மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு விவசாயத் துறை உட்பட 21 உப துறைகளுக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 15,892 நேரடியானதும் மற்றும் மறைமுகமானதுமான தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- துறைகளின் முன் நோக்கிய மற்றும் பின் நோக்கிய இணைப்புக்களில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு கடன்களை வழங்குலதன் மூலம் பல பெறுமதிச் சங்கிலிக் கொத்தணிகள் தாபிக்கப்பட்டன.

2.7.2 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் அபிவிருத்தி வசதியளிப்புக் கருத்திட்டம்

உலக வங்கியினால் நிதி உதவி வழங்கப்படும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் அபிவிருத்தி வசதியளிப்புக் கருத்திட்டம் 2011ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதோடு, வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் பிரதேச மட்டத்திலான ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்கும் கிராமிய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தினையும் விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்களை விரிவடையச் செய்ய எதிர்பார்க்கின்றது. இக்கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ஐ. அ. டொ 57.4 மில்லியன்களாகும். 2012ஆம் ஆண்டில் பங்கேற்பு நிதி நிறுவனங்கள் 217 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு இடையில் பகிர்ந்துள்ளதோடு, அதனை 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடன் பகிர்வில் 87 சதவீத வளர்ச்சியினையும் மற்றும் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையில் 141 சதவீத வளர்ச்சியினையும் காட்டுகிறது. வங்கி வாரியான செயலாற்றுகை வரைபு 7இல் கொடுக்கப்பட்டுள்ளது.

வரைபு 7 - வங்கி வாரியான செயலாற்றுகை



துறை வாரியான வகையீட்டினைப் பொருத்த வரை, விவசாயப் பதனிடல், ஹோட்டல்கள், உணவகங்கள், சுற்றுலா, தயாரிப்பு, மற்றும் சேவைகள் துறைகள் போன்றன ஏனைய துறைகளை விட அதிக அளவிலான நிதி உதவியினைப் பெற்றுக் கொண்டுள்ளன. 2012ஆம் ஆண்டில் விவசாயப் பதனிடல் துறை ரூபா 377.33 மில்லியன்களை அறிக்கையிட்ட அதே வேளை, சுற்றுலாத் துறை ரூபா 297 மல்லியன்களை அறிக்கையிட்டுள்ளது. ஆயினும், வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையை ஏனைய துறைகளுடன் ஒப்பிடுகையில் அழகுக்கலை, ஆடை தயாரிப்பு, கடற்றொழில், மலர்க்கலை,

அலங்கார மீன் வளர்ப்பு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் மென்பொருள் அபிவிருத்தித் துறைகள் போன்றன குறைந்த முன்னேற்றச் செயலாற்றத்தினையே அறிக்கையிட்டன.

இயலளவு அபிவிருத்திச் சேர்க்கையின் கீழ், சகல பங்கேற்பு நிதி நிறுவனங்களும், அவர்களது வங்கிகளில் பணிபுரியும் 3,315 கடன் உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்துள்ளதோடு, 3,586 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் ரூபா 21.32 மில்லியன்களை பயன்படுத்தியுள்ளன. தமது வங்கியில் பணிபுரியும் 1,149 கடன் உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதன் மூலமும், 981 தொழில் முயற்சியாளர்களுக்க வழங்கப்பட்ட கடன்களில் ரூபா 4 மில்லியன்களை பயன்படுத்துவதன் மூலமும் இலங்கை வங்கி முதலிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. ஆயினும், தேசிய அபிவிருத்தி வங்கி இயலளவைக் கட்டியெழுப்புவதன் கீழ் உயர்ந்த அளவிலான நிதியினைச் செலவளித்துள்ளதோடு. அவ்வங்கி தனது 583 கடன் உத்தியோகத்தர்களையும் 788 தொழில் முயற்சியாளர்களையும் மாத்திரமே பயிற்றுவித்துள்ளது.

2.7.3 தேசிய விவசாய வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி

விவசாய வியாபார நடவடிக்கைகளில், அரச தனியார் பங்கேற்பினை மேம்படுத்தும் அரசாங்கக் கொள்கைக்கு ஏற்ப, நிதி உடன்படிக்கையானது விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியுடன் கைச்சாத்திடப்பட்டதோடு, அதன் மூலம் 2010 – 2016ஆம் அண்டு காலப்பிரிவில் தேசிய விவசாய வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஐ அ டொ 22.5 மில்லியன்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித் திட்டம் நிதித்திட்டமிடல் அமைச்சின் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இக்கருத்திட்டத்தின் சேர்க்கைகள் பின்வருமாறு;

I. சந்தைப்படுத்தல் வலையமைப்பு அபிவிருத்தியும் இணைப்புக்களும்
II. நுண்நிதி மற்றும் இளைஞர்களைப் பயிற்றுவித்தல்
III. நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவமும், கொள்கை ஆதரவும்

விவசாய வியாபாரத் துறையின் அபிவிருத்திக்கான புதிய அணுகு முறைகளை பிரயோகிக்கும் நோக்கத்துடன் விவசாயிகள் மற்றும் நாணயப் பொருளாளர்களின் மூலமான பங்கு மூலதனப் பங்களிப்புடன் அரச கம்பனிகளை உருவாக்குவதற்கு இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்புதிய எண்ணககருவின் கீழ் முன் மொழியப்பட்டுள்ள நடைமுறைப்படுத்தல் பொறிமுறை நடவடிக்கைளை இலகுவாக மேற்கொள்வதற்கான சாதகமான ஒரு சூழலை உருவாக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, அரசாங்கமும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியும் நிதியை மேலும் வினைத் திறனான முறையில் பயன்படுத்தும் நோக்கத்துடன் பரிமாணத்தை திருத்தியமைக்கவும் மற்றும் “திவி நெகும” நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து இந்நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தவும் தீர்மானித்துள்ளது.

2.7.4 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக ஜேர்மன் சர்வதேச ஒத்துழைப்பின் ஊடாக யூரோ 2.785 மில்லியன்களை வழங்குவதன் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கும், மற்றும் ஜேர்மன் அரசாங்கத்திற்கும் இடையில் 2012ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் இக்கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதற்கு மேலதிகமாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறையின் அபிவிருத்திகளு அவசியமான நிதி சார்ந்ததும், மற்றும் நிதி சாராததுமான முன் நிபந்தனைகளை விருத்தி செய்யும் நோக்குடன் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கான மேலதிக நிதியினை வழங்குவதற்கு ஜேர்மன் இணக்கம் தெரிவித்துள்ளது.

2012ஆம் ஆண்டிற்கான அடைவுகள்

- கருத்திட்டத்தின் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக ஆலோசனை மற்றும் நிலையயிற் குழுக்களை ஸ்தாபித்துள்ளது.
- வங்கித் துறையின் உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு சர்வதேச நிபுணர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.
- தொடர்புடைய நிறுவனங்களுடனான ஆரம்ப கொள்கைப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன.
- கம்போடியாவில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான திட்டமிடல் செயன்முறை தொடர்பான நான்கு நாட்களுக்கான செயமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது.
- 2013ஆம் ஆண்டிற்கான வேலைத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது.
- நிகழ்ச்சித் திட்டத்திற்கான கண்காணிப்புப் பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துவது தொடர்பான ஆரம்ப உரையாடல்கள் நடாத்தப்பட்டன.
- தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியை ஸ்தாபிப்பது தொடர்பான ஆரம்பப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன.

2.7.5 நுண்நிதிக் கருத்திட்டத்தின் மேம்பாடு

இக்கருத்திட்டத்தின் நோக்கம் சமூகத்தின் வறிய பிரிவினருக்கும் மற்றும் நுண் மற்றும் சிறிய தொழில் முயற்சிகள் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட நுண்நிதி நிறுவனங்களினால் பொருத்தமான முறையில் வழங்கப்படும் சேவைகளை அதிகரிப்பதும் விருத்தி செய்வதுமாகும். இக்கருத்திட்டத்திறல் மூன்று சேர்க்கைகள் உள்ளன:

1. நுண்நிதி நிறுவனங்களின் இயலளவு அபிவிருத்தி
2. நுண்நிதிச் சேவைத் துறை அபிவிருத்தி
3. நுண்நிதிக் கொள்கை மற்றும் சட்டவாக்க அபிவிருத்தி வேலைச்சட்டகம்

இந்நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான உடன்படிக்கை 2007ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை அரசாங்கத்துக்கும் மற்றும் ஜேர்மன் அரசாங்கத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது. இக்கருத்திட்டத்தின் கட்டம் 1 மற்றும் கட்டம் 11 ஆகியன முறையே 2009 ஆம் ஆண்டிலும் 2011ஆம் ஆண்டிலும் பூர்த்தி செய்யப்பட்டன. இக்கருத்திட்டத்தின் மொத்தச் செலவு யூரோ 3.7 மில்லியன்களாகும். இக்கருத்திட்டம் அபிவிருந்தி நிதித் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, வவுனியா, பதுளை, மொனராகலை, நுவரெலியா, மற்றும் புத்தளம் மாவட்டங்களில் ஜேர்மன் சர்வதேச ஒத்துழைப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

முக்கியமான அடைவுகள்

- நிறுவனத் தவணையில் நுண்நிதித் துறை பலப்படுத்தப்பட்டதோடு, அதன் பிரதேச அடிப்படையும் நீடிக்கப்பட்டது.
- மக்களுக்கு சிறந்த நிதிச் செவைகளை வழங்கும் நோக்குடன் இருபது நுண்நிதி நிறுவனங்களின் வினைத் திறனையும் மற்றும் நிலைபேறான தன்மையையும் விருத்தி செய்வதற்கு ஆதரவளிக்கப்பட்டது.
- பங்கேற்பு நிறுவனங்களின் சுமார் 350 ஊழியர்களுக்கு உதாரணமைாக குடும்ப காசு முகாமைத்துவம், தொழில்முயற்சி அபிவிருத்தி, தலைமைத்துவம், நடத்தை அபிவிருத்திப் பயிற்சி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி போன்ற பல்வேறு வகையான உள்ளூர் பயிற்சிகளும் மற்றும் ஆலோசனை சேவைகளும் நடாத்தப்பட்டன.
- எண்பதுக்கும் அதிகமான உறுப்பு நிறுவனங்களின் விருப்பங்களை பிரதிநிதித்துப்படுத்துவதன் மூலம் நுண்நிதி வலையமைப்பொன்று ஸ்தாபிக்கப்பட்டது.
- பின் தங்கிய பிரதேசங்களில் சுமார் 420,000 புதிய வாடிக்கையாளர்களுடன் நுண்நிதிச் சேவைகள் விரிவாக்கப்பட்டன.

- இலங்கையில் நுண்நிதித் துறை தொடர்பான சட்ட ரீதியான ஆய்வு ஒன்று பூர்த்தி செய்யப்பட்டன.
- அபிப்பிராயங்களை பகிர்ந்து கொள்வதற்கான கலந்துரையாடல் செயலமர்வுகளின் ஊடாக பயனாளிகளுக்கிடையில் சிறந்த நடைமுறைகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

2.8 ஏனையவை

2011ஆம் ஆண்டு காலப்பிரிவில், இத்திணைக்களம் 04 அமைச்சரவை விஞ்ஞாபனங்களையும், கௌரவ நிதித் திட்டமிடல் அமைச்சருக்கான 15 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புக்களையும் தயாரித்தது. மேலும், இத்திணைக்களம் ஏனைய திறைசேரித் திணைக்களங்களுக்கு 10 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான விமர்சனங்களை வழங்கியுள்ளது.

இத்திணைக்களத்தின் அநேகமான பணியாளர்கள் குறிப்பிட்ட காலப்பகுதியில் நியதிச் சபைகளின் பணியாளர்கள் (திறைசேரி பிரதிநிதித்துவராக) சபைகளின் அங்கத்தவராக சேவையாற்றியுள்ளதோடு, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப ஒத்துழைப்புக் குழு மற்றும் பெறுகை நடவடிக்கைளின் குழுக்களிலும் சேவையாற்றியுள்ளனர்.

மேலும், இத்திணக்களம், 2012ஆம் ஆண்டிற்கான மிகவும் யதார்த்தமான நடைமுறையிலான வரவு செலவுத் திட்டமொன்றை தயாரிப்பதற்காக பல விதமான நோக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கும், மற்றும் அபிப்பிராயங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் விவசாய நிறுவனங்கள், கொத்தணிகள், வர்த்தகர்கள், மற்றும் ஏனைய குறிப்பிட்ட நாணயப் பொருளாளர்கள் போன்றொருடனான மாண்பு மிகு ஜனாதிபதி அவர்களின் முன்-வரவு செலவுத்திட்ட கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தது.

3. நிறுவன மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்

3.1 பணியாளர் தொகுதி

பதவிகள்		அனுமதிக்கப்பட்ட பதவிகள்	தற்போது இருக்கும் பதவிகள்
01	பணிப்பாளர் நாயகம்	01	01
02	மேலதிகப் பணிப்பாளர் நாயகம்	01	00
03	பணிப்பாளர்	03	03
03	பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர்	04	03
04	பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் - கணக்காளர்	01	01
05	திட்டமிடல் உதவியாளர்	01	01
06	ஆராய்ச்சி உதவியாளர்	02	01
07	முகாமைத்துவ உதவியாளர்	04	04
08	காரியாலய தொழில் உதவியாளர்	05	05
09	சாரதி	04	04
மொத்தம்		***26***	***23***

3.2 நிறுவன ஒழுங்கமைப்பு வரைபு



பிப - பிரதிப் பணிப்பாளர்
க - கணக்காளர்
உப - உதவிப் பணிப்பாளர்
ஆஉ - ஆராய்ச்சி உதவியாளர்
திஉ - திட்டமிடல் உதவியாளர்
தபுஅ - தலைமை புத்தாக்க அதிகாரி
முஉ - முகாமைத்துவ உதவியாளர்
சாரதி - சாரதி
காதொஉ - காரியாலய தொழில் உதவியாளர்

<u>துறைகள்</u>

சிநதொ - சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள்
நுநி - நுண் நிதி
அநி & மூச - அபிவிருத்தி நிதியும், மூலதனச் சந்தையும்

3.3 பணியாளர்களின் தகவல்கள்

பெயர்	பதவி	தொடர்பு கொள்ள வேண்டிய விபரங்கள்		
		தொலைபேசி	தொலை நகல்	தொலை அஞ்சல்
திரு. டீ.எஸ். ஜயவீர	பணிப்பாளர் நாயகம்	2484542	2394908	tspcdon@sltnet.lk dgdf@dfd.treasury.gov.lk
செல்வி சீ. எஸ். பெரேரா	பணிப்பாளர்	2484572	2484955	christinep@dfd.treasury.gov.lk
செல்வி ஏ. எச். எஸ். பரீதா	பணிப்பாளர்	2484595	2484955	fareedah@dfd.treasury.gov.lk
திருமதி. எம். கே. டீ.என். மாதம்பே	பணிப்பாளர்	2484605	2484955	nilukad@dfd.treasury.gov.lk
திரு. பீ. எம். கே. ஹெட்டியாரச்சி	பிரதிப் பணிப்பாளர்	2484596	2484955	manjulap@dfd.treasury.gov.lk
திருமதி. டப்ளியூ.எல்.எம்.ஏ லியனகே	கணக்காளர்	2484596	2484955	liyanagem@dfd.treasury.gov.lk manorigl@yahoo.com
செல்வி ஆர்ஏ.டீ.ஆர். ரணசிங்க	உதவிப் பணிப்பாளர்	2484594	2484955	ranithad@dfd.treasury.gov.lk radranitha@gmail.com
செல்வி. ஜே.டீ.கொடின்கடுவை	உதவிப் பணிப்பாளர்	2484854	2484955	dilrukshij@dfd.treasury.gov.lk jdilkotinkaduwa@yahoo.com
திரு. எச். பீ. எஸ். சாந்த	திட்டமிடல் உதவியாளர்	2484884	2484955	shantha@dfd.treasury.gov.lk
செல்வி ஏ. எம். விக்ரமசிங்க	ஆராய்ச்சி உதவியாளர்	2484884	2484955	amanthiw@dfd.treasury.gov.lk amanthi1974@ yahoo.com
திருமதி. சீ. அஸ்ஸலஆரச்சி	முகாமைத்துவ உதவியாளர்	2484855	2484955	-
திருமதி. பீ.எச.எஸ்.சமரவிக்ரம	முகாமைத்துவ உதவியாளர்	2484862	2484955	-
திருமதி. ஹேவாவசம் (05.01.2012 ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளார்)	முகாமைத்துவ உதவியாளர்	2484862	2484955	-
செல்வி. ஈ. டப்ளியு சீலவதி	முகாமைத்துவ உதவியாளர்	2484862	2484955	-
செல்வி ஜே.எம்.ஐ.ஏ. கீசானி *	தரவு குறிப்பிடும் செயற்பாட்டாளர்	2484884	2484955	-
திரு. எம். என். எல். பிரேமதிலக	சாரதி	2484855	2484955	-
திரு. கே. ஆர். பீ. ஹேமச்சந்திர (22.02.2012 ஆம் திகதி இட மாற்றம் செய்யப்பட்டார்)	சாரதி	2484855	2484955	-
திரு. டீ. ஏ. ஜயரத்ன (10.08..2012 ஆம் திகதி இட மாற்றம் செய்யப்பட்டார்)	சாரதி	2484855	2484955	-

பெயர்	பதவி	தொடர்பு கொள்ள வேண்டிய விபரங்கள்		
		தொலைபேசி	தொலை நகல்	தொலை அஞ்சல்
திரு. எச்.பீ.ஆர். சமரசிங்க் (05.07.2012 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார்)	காரியாலய உதவியாளர்	2484855	2484955	-
திரு. டப்ளியு. ஏ. உபாலி (05.01.2012 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டு 08.08.2012ஆம் திகதி மாற்றல் செய்யப்பட்டார்)	சாரதி	2484855	2484955	
திரு. கே.டீ கீர்த்திரத்ன (12.06.2012 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார்.)	சாரதி	2484855	2484955	
திரு. எஸ். ஏ. கீர்த்தி சேன (08.08.2012 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார்.)	சாரதி	2484855	2484955	
திரு. பீ.ஏ.ஏ பெர்ணான்டோ (02.04.2012ஆம் திகதி மாற்றல் செய்யப்பட்டார்)	காரியாலய உதவியாளர்	2484855	2484955	-
திருமதி ஜே. ஏ. எச். சீ. கே. ஜயசிங்க	காரியாலய உதவியாளர்	2484855	2484955	-
திரு. ஆர். ஏம். குலதுங்க (02.01.2012 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார்.)	காரியாலய உதவியாளர்	2484855	2484955	-
திரு. ஆர். ஏம். குலதுங்க (02.01.2012 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார்.)	காரியாலய உதவியாளர்	2484855	2484955	-
திரு. கே. பீ.ஐ சமிந்த (04.01.2012 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார்.)	காரியாலய உதவியாளர்	2484855	2484955	-
திரு. ே.ஸ். ஹேமந்த (04.04..2012 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார்.)	காரியாலய உதவியாளர்	2484855	2484955	-

* *குடித்தொகை மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்திலிருந்து விடுவிக்கப்பட்ட அலுவலர்*

3.4 உள்நாட்டு பயிற்சி பாடநெறிகள், கல்விப் பயணங்கள், மற்றும் ஈநாடுகள்

அலுவலர்களின் பெயர்கள்	பாடநெறியின் பெயர்	பாடநெறியின் காலப்பிரிவு	நடாத்தப்பட்ட நிறுவனத்தின் பெயர்
செல்வி சீ. எஸ். பெரேரா, பணிப்பாளர்	அரச பெறுகை முகாமைத்துவம்	19.07.2011-20.07.2011	மிலோதா
செல்வி ஏ. எச். எஸ். பரீதா பணிப்பாளர்	கணக்கிடலும், நிதி முகாமைத்துவமும்	19.09.2012-20.08.2012	இலங்கை மத்திய வங்கி
திருமதி. எம். கே. டீ.என். மாதம்பே பணிப்பாளர்	அரச பெறுகை முகாமைத்துவம்	19.07.2011-20.07.2011	மிலோதா
திருமதி. டப்ளியூ.எல்.எம்.ஏ லியனகே, கணக்காளர்	நிலுவை நிதிப் பொறிமுறை -கடன் மற்றும் கடன் முகாமைத்துவ உபாயங்கள்	16.02.2012-20.07.2012	மிலோதா
செல்வி ஆர்ஏ.டீ.ஆர். ரணசிங்க, உதவிப் பணிப்பாளர்	நிலுவை நிதிப் பொறிமுறை -கடன் மற்றும் கடன் முகாமைத்துவ உபாயங்கள்	16.02.2012-20.07.2012	மிலோதா
திருமதி திலந்தி ஹேவாவசம், முகாமைத்துவ உதவியாளர்	தொடர்பாடல் ஆங்கிலத்தில் டிப்ளோமா	10.05.2012-04.04.2012	மிலோதா
செல்வி. ஜே. எம். ஐ. ஏ. கீசானி தரவு குறிப்பிடும் செயற்பாட்டாளர்	மென்பொருள் அபிவிருத்தியில் டிப்ளோமா	01.08.2011-03.08.2012	தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம்
திரு. எம்.என்.எல் பிரேமதிலக சாரதி	பாதுகாக்கப்பட்ட விஞ்ஞான ரீதியான பொருளாதார ரீதியான வாகன செலுத்துகை நிகழ்ச்சித் திட்டம்	02.03.2012 (ஒரு நாள்)	நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனம்
திரு. எம்.என்.எல் பிரேமதிலக சாரதி	சாரதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	09.10.2012-12.10.2012	ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்
திரு.ஆர்.பீ.ஜே. ஹன்டன் சாரதி	சாரதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	22.10.2012-25.10.2012	ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்
திரு. கே. டீ. கீர்த்திரத்ன	சாரதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	22.10.2012-25.10.2012	ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்
திரு. எஸ். ஏ. கீர்த்தி சேன	சாரதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	16.10.2012-19.10.2012	ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்

3.5 வெளி நாட்டு பயிற்சி பாடநெறிகள், கல்விப் பயணங்கள், மற்றும் மாநாடுகள்

அலுவலர்களின் பெயர்கள்	பாடநெறியின் பெயர்	பாடநெறியின் காலப்பிரிவு	நாட்டின் பெயர்
திரு. டீ. எஸ். ஜயவீர, பணிப்பாளர் நாயகம்	சிறந்த காற்றின் தரம் - 2012	03.12.2012-08.12.2012	ஹொங்கொங்
செல்வி சீ. எஸ். பெரேரா, பணிப்பாளர்	திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் அபிவிருத்தி)	22.10.2012-27.10.2012	கம்போடியா
செல்வி ஏ. எச். எஸ். பரீதா, பணிப்பாளர்	தனியார் துறையை வளர்ச்சியடைச் செய்தலும், வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கவர்தலும்	10.07.2012-21.07.2012	சிங்கப்பூர்
	அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டம் - உயர் மட்டத்திலான கொள்கைக் கேள்வி மாநாடு	19.11.2012-24.11.2012	கொரியா
திரு. பீ.எம்.கே. ஹெட்டியாரச்சி உதவிப் பணிப்பாளர்	சர்வதேச பல்கலைக்கழகத்தில் அரச கொள்கை மற்றும் அரசிறை தொடர்பான முதுமாணிப் பட்டப் படிப்பு	03.08.2010-03.09.2012	ஜப்பான்
செல்வி. ஜே.டீ. கொடின்கடுவை உதவிப் பணிப்பாளர்	கொள்கை பொருளியலில் கலை முதுமாணிப்பட்டம்	12.08.2011-06.06.2012	ஐக்கிய அமெரிக்கா
திரு.எச் பீ.எஸ். சாந்த திட்டமிடல் உதவியாளர்	அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான பேரண்டப் பொருளாதார அபிவிருத்தி	06.09.2012-26.09.2012	சீனா
சேல்வி ஏ.எம் விக்கிரமசிங்ஹ, ஆராய்ச்சி உதவியாளர்	பொருளாதார அபிவிருத்தி உபாய நிகழ்ச்சித் திட்டம்	05.06.2012-25.06.2012	கொரியா

4. நிதி தொடர்பான தகவல்கள்

செலவு விபரம்	மதிப்பீடு (ரூபா)	உள்ள படி (ரூபா)
மீண்டு வரும் செலவினம்	**358,900,500**	**315,775,337**
ஆளுக்குரிய வேதனாதிகள்	9,870,000	9,797,887
பிரயாணச் செலவுகள்	772,240	757,232
வழங்கல்கள்	1,598,210	1,581,385
பராமரிப்புச் செலவினம்	1,120,000	1,094,413
சேவைகள்	1,310,790	1,051,291
அபிவிருத்தி மானியங்கள் (வட்டி மானியங்கள்)	343,921,260	301,186,121
ஏனைய மாற்றல்கள்	308,000	307,008
மூலதனச் செலவினம்	**2,164,617,000**	**1,560,816,339**
மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு	300,000	254,972
இயலளவைக் கட்டியெழுப்பல்	400,000	125,565
நுண் நிதித்துறையின் மேம்பாடு	1,530,550	1,530,546
சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் தொடர்பான அபிவிருத்தி செயற்றிட்டம்	625,400	625,393
சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் அபிவிருத்திக்கான வசதியளிப்புக் கருத்திட்டம்	2,024,374,600	1,546,472,911
தேசிய விவசாயம் சார்ந்த வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (IFAD)	136,917,000	11,806,952
சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறையின் மேம்பாடு (GTZ)	469,450	0
மொத்தம்	**2,523,517,500**	**1,876,591,676**